NST Campus

# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2026

| தரம் 06 | பரதனாட்டியம் | 1.30மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டிலக்கம் : ......................    புள்ளிகள்

## பகுதி -I

**சரியான விடையின் கீழ் கோடிடுக**

1) செயற்கை அசைவிற்கு உதாரணம்?

I. . சூறாவளி    II. கொடி படருதல்    III. பறவை பறத்தல்    IV. பூப்பறித்தல்

2) சின்னஞ் சிறுமியர் எனத் தொடங்கும் பாடலின் இராகம்?

I. ஆனந்தபைரவி    II. சிந்துபைரவி    III. ஆரபி    IV. காம்போதி

3) நமஸ்காரத்தின் போது பயன்படும் ஒற்றைக்கை முத்திரையின் எண்ணிக்கை?

I. 2    II. 3    III. 1    IV. 4

4) தியான ஸ்லோகத்தில் கூறப்பட்ட இறைவன் எப்படிபட்டவர்?

I. நீலநிறமானவர்    II. பரிசுத்தமானவர்    III. கோவப்பட்டவர்    IV. மென்மையானவர்

5) தியானஸ்லோகத்தில் பயன்படுத்தப்படும்அபூர்வ முத்திரை?

I. அஞ்சலி    II. சூசி    III. காங்கூலபேதம்    IV. சிகரம்

6) வண்டு என்பதை குறிக்க பயன்படும் ஒற்றைக்கை முத்திரை?

I. கம்சாசியம்    II. பிரம்மரம்    III. கபித்தம்    IV. சகடம்

7) மிருகசீர்சம் என்பதன் பொருள்?

I. சிங்கத்தின் முகம்    II. அன்னம்    III. மான்தலை    IV. ஏகம்

8) 8வது தட்டடவின் தாளம்?

I. ஆதி    II. ரூபகம்    III. திரிபுடை    IV. ஏகம்

9) பரதநாட்டியம் கற்பதால் ஏற்படும் நன்மை?

I. பக்தி உணர்வு ஏற்படும்    II. தலைக்கணம் ஏற்படும்

III. உடல் பருமனடையும்    IV. கீழ்ப்படிவு இல்லாது போய்விடும்

10) குரப்பிரம்மா என தொடங்கும் ஸ்லோகம்?

I. புஸ்பாஞ்சலி    II. குருஸ்ரோத்திரம்

III. நாட்டியகிரமம்    IV. தியானஸ்லோகம்

(10x2=20புள்ளி)

## இடைவெளி நிரப்புக

( பாவம் / பரதநாட்டியம் / லகு / காவடி / பிரம்மா )

1) தட்டி விரல்களை எண்ணுதல்………………….எனப்படும்

2) படைத்தல் தொழிலை புரிபவர்………………….ஆவார்

3) 5ம் வேதமாக……………………..கொள்ளப்படுகிறது.

4) உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சிகளை முகத்தின் மூலம் வெளிக்காட்டுவது………………

5) …………………….. நடனம் முருகப்பெருமானை வேண்டி ஆடப்படும்.
(10புள்ளி)

## சரியாயின்(✔) எனவும் பிழையாயின்(ஒ) எனவும் அடையாளமிடுக

1) எசலப்பெரகரா மாசி மாதத்தில் கொண்டாடப்படும் (……)

2) அம்மனை வேண்டி ஆடுவது கரக ஆட்டமாகும் (…..)

3) கால்களை நாட்டிச் செய்வது நாட்டவு எனப்படும்(…...)

4) மனம் செல்லுமிடத்தில் பாவம் உண்டாகும் (…..)

5) கோயில் நடன மாதரை கன்னிகள் என்று அழைத்தனர்(…..)

## பகுதி - II

பின்வருவனவற்றில் 3 வினாக்களுக்கு விடை தருக

**01)**
1) தியானஸ்லோகத்தின் ஸ்லோகத்தையும் கருத்தையும் தருக?
2) தியானஸ்லோகத்தின் சொல் பொருள் உபயோகிக்கும் முத்திரைகளை அட்டணைப்படுத்துக? (20 புள்ளி)

**02)**
1) நமஸ்காரத்தில் பயன்படுத்தப்படும் முத்திரைகளின் எண்ணிக்கை யாது? அவை எவை?
2) நமஸ்காரம் என்றால் என்ன என்பதை விளக்குக? (20 புள்ளி)

**03)**
1) குருஸ்ரோத்ரத்தின் ஸ்லோகத்தை தருக?
2) குருஸ்ரோத்ரத்தின் கருத்தினை எழுதுக?
3) குரு லட்சணம் பற்றி சுரக்கமாக கூறுக. (20புள்ளி)

**04)** எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக?
1) கரகம்

2) அபூர்வஹஸ்தங்கள்
3)மயில் நடனம் (20 புள்ளி)

**05)**

1) எசலப்பெரகரா யாரால் கொண்டாடப்படுகிறது?

2) எசலபெரகரா பற்றி விளக்குக? (20 புள்ளி)